# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகேஸ்வரி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | நடேசன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 14.3.2024.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் சம்பவ சமயத்தில் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருந்து வந்தேன். தற்போது டோல் கேட் அருகில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயம் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருந்து கொண்டு பேன்சி ஸ்டோர் வைத்து தொழில் செய்து வந்தோம். வழக்கில் இறந்துபோன சின்னுசாமி என்னுடைய பெரியம்மா மகன். அவர் டிவி ரிப்பேர் செய்து கொண்டிருந்தார். அவருக்கு 2 மகன்கள். பெரிய மகன்

பெயர் சந்திரசேகர். ஆஜர் 1ம் எதிரி சந்திரசேகர் ஆவார். 2018ம் வருடம் இரவு 10.00 மணி அளவில் நான் என் கடையில் இருந்தேன். அப்போது தெரிந்த ஒரு நபர் வந்து என்னிடம் சின்னுசாமி இறந்துவிட்டதாக சொல்கிறார்கள் என்று சொன்னார். நான் உடனே சென்று சின்னுசாமியின் வீட்டிற்கு சென்று பார்த்தேன். யாரும் கிட்ட போகாதீங்க என்று சொன்னதால் நான் வெளியே நின்றேன். உள்ளூர்க்கார்கள் நிறைய பேர் இருந்தார்கள். மட்டை வெட்டும் ஒரு பெரியவர் பெயர் பொன்னுசாமி அவர் சின்னுசாமியின் வீட்டிற்கு பின்புறம் மட்டை வெட்ட வந்தபோது பெரிய மகன் சந்திரசேகர் மற்றும் 2 பேர் வந்ததாக சொன்னார். அதனால் அவர்கள் 3 பேரும் சின்னசாமியை ஏதாவது செய்திருப்பார்கள் என்று அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். அது மட்டும்தான் எனக்குத் தெரியும். அதன்பின்னர் அவரது சின்ன மகன் வந்தார். வந்து மேல்நடவடிக்கை எடுத்தார். அதன்பின்னர் போலிசார் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் கேள்விப்பட்டதை சொன்னேன். சின்னுசாமிக்கும் அவரது மூத்த மகனுக்கும் சொத்து சம்மந்தமாக சண்டை வரும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை;</u>

நான் தகவல் கேட்டு சின்னுசாமியின் வீட்டிற்கு போனபோபோது போலிசார் இருந்தார்களா என்றால் இல்லை. அப்போது பொன்னுசாமி இல்லை என்றால் சரி. நான் அவரை பார்க்கவில்லை என்றால் சரி. சின்னுசாமி இறந்தபின்னர் அண்ணனும் தம்பியும் சேர்ந்து சொத்தை

விற்றுவிட்டார்கள் என்றால் சரி. இன்று என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி ரமேஷ்தான் அழைத்து வந்தார் என்றால் சரி. சின்னுசாமிக்கும் 1ம் எதிரிக்கும் சண்டை ஏதும் ஏற்படவில்லை என்றும் சாட்சி ரமேஷ் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் 1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.